Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். STC 227/2022**

**வழக்கு சாட்சி எண். PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழரசன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பெருமாள் | தொழில் | : | |
| கிராமம் | : | அரூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | அரூர் | வயது | : | 48 |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **15th** Day of **April 2024.**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவின் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதிரி எனக்கு கொடுத்த 30.09.2021 ம் தேதியிட்ட எதிரி தான் கணக்கு வைத்திருக்கும் AXIS வங்கி, தர்மபுரி கிளை காசோலை எண். 227676 ரூ. 30,000/க்குண்டான காசோலையின் அசலை தாக்கல் செய்கிறேன். **(அது மசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி காசோலையை நான் கணக்கு வைத்திருக்கும் பெடரல் வங்கி, அரூர் கிளையில் வசூலுக்கு போட்டபோது மேற்படி காசோலை எதிரி வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என கடந்த 01.10.2021 ம் தேதி திருப்பப்பட்ட மெமோவின் அசலை தாக்கல் செய்கிறேன். **(அது மசாஆ 2**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதன் பிறகு எதிரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க மீண்டும் 30.10.2021ம் தேதி வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது எதிரி வங்கி கணக்கு முடிக்கப்பட்டது என கடந்த 01.11.2021ம் தேதி திருப்பப்பட்ட மெமோவின் அசலை தாக்கல் செய்கிறேன். **(அது மசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). கடந்த 05.11.2021ம் தேதி எதிரிக்கு நான் அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(அது மசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி அறிவிப்பை எதிரி கடந்த 06.11.2021ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையை தாக்கல் செய்கிறேன். **(அது மசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). கடந்த 24.11.2021ம் தேதி எதிரி எனக்கு அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு அசல் தாக்கல் செய்கின்றேன். **(அது மசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிரி எனக்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் அசல் தாக்கல் செய்கின்றேன். **(அது மசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). கடந்த 31.12.2020ம் தேதி எதிரி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் தாக்கல் செய்கின்றேன். **(அது மசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**